அசல் வழக்கு எண்.279/2019 வா.சா.2 அலெக்சாண்டர் த/பெ குழந்தைவேலு

**<u>01.03.2023 குறுக்குவிசாரணை</u>**

1. வழக்குச் சொத்தானது சூரியகுளம் ஆரணியில் உள்ளது. வழக்குச் சொத்தில் வாதிக்கு சொந்தமானது. வாதி வழக்குச் சொத்தில் வசித்து வருகிறாரா என்றால் இரண்டு வருடமாக வசித்து வரவில்லை.

2. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றி நன்றாக தெரியும். நான் அந்த ஆவணங்கள் ஏற்படும்போது உடன் இருந்தேன். ஆனால் அந்த ஆவணங்களில் நான் கையெழுத்து எதுவும் போட்டேனா என்றால் இல்லை.

3. வழக்கில் வாதித்தரப்பில் 5 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த 5 ஆவணங்களில் 4 ஆவணங்கள் ஒரே தேதியில் ஏற்பட்டது மற்றொன்று வேறு தேதியில் அதற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணம் ஆகும்.

4. நான் கோவாப்ரேடிவ் ஸ்பின்னிங் மில்லில் வேலை செய்து 2013ல் ஓய்வு பெற்றேன். வாதித் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 5 ஆவணங்களில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. வாதி வழக்கு ஆவணங்கள் பதிவு செய்யக்கூடாது என்பதற்காக சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆட்சேபனை ஏதும் தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார் ஆனால் எந்த தேதியில் ஆட்சேபனை தெரிவித்தார் என்று எனக்குத் தெரியாது.

6. வாதி தான் சாட்சியம் அளிக்க என்னை அழைத்தார். வாதி இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. வழக்கு ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றும் வாதி சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.